மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

# தமிழ்மொழியும் இலக்கியமும்
## சுயகற்றல் செயற்பாடு
## தரம் - 09

➢ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. இரவு வேளையில் கண் சிமிட்டும் நட்சத்திரங்கள் வசீகரமாகத் தோற்றமளித்தன. இங்கு வசீகரம் என்பதன் ஒத்த கருத்து.
    1. அழகு 2. உடுக்கள் 3. நிசி 4. அலங்கோலம்

02. உழவன், வைகறைப் பொழுதில் மண்வெட்டியுடன் வயலுக்குச் சென்றான். வைகறை என்பதன் ஒத்த கருத்து.
    1. சாயங்காலம் 2. மதியம் 3. விடியற்காலை 4. பழனம்

03. தொலைக்காட்சி நாடகங்களில் அபத்தமான காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. அபத்தம் என்பதன் ஒத்த கருத்து.
    1. உண்மை 2. பொய் 3. ஆபத்து 4. இனிமை

04. ‘இன்சொலால் ஈரம் அளைஇப் படிறு இலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்’’ இங்கு படிறு என்பதன் கருத்து.
    1. வண்டு 2. வஞ்சனை 3. ஒளி 4. அன்பு

05. ஒருவரை அகமும் முகமும் மலர வரவேற்க வேண்டும். இங்கு அகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
    1. வதனம் 2. யாக்கை 3. உள்ளம் 4. ஈதல்

06. “சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும்”. இம்மை என்பதன் எதிர்ப்பதம்
    1. எழுமை 2. இருமை 3. மறுமை 4. ஒருமை

07. இன்சொல் பேசுதல் சிறந்த அறம் ஆகும். இன்சொல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
    1. வீண்சொல் 2. புன்சொல் 3. தன்சொல் 4. வன்சொல்

08. முதலாளிமார் தொழிலாளிகளுக்குச் சிறுமை செய்தனர். இங்கு சிறுமை என்பதன் எதிர்க் கருத்துச் சொல்
    1. பெருமை 2. வறுமை 3. அருமை 4. மறுமை

09. வருந்தி வந்தவருக்கு ஈதல் நல்லது. இங்கு ஈதல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
    1. ஏற்றல் 2. தேடல் 3. கொடுத்தல் 4. கற்றல்

10. கடற்கரைக் காட்சி சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் களிப்பு அளிக்கும். இங்கு களிப்பு என்பதன் எதிர்க்கருத்து.
    1. மகிழ்ச்சி 2. கவலை 3. சந்தோஷம் 4. இரசனை

11. சோளத்தின் உள்ளீடு மணி என்பது போல கற்றாளையின் உள்ளீடு
    1. முத்து 2. விதை 3. சோறு 4. சதை

12. பனையின் இலை ஓலை என்பது போல கமுகின் இலை
    1. தோகை 2. கூந்தல் 3. தாள் 4. மடல்

13. மீனின் இளையது குஞ்சு என்பது போல தவளையின் இளையது
    1. குட்டி 2. போதகம் 3. கன்று 4. பேத்தை

14. தென்னையின் பிஞ்சு குரும்பை என்பது போல பனையின் பிஞ்சு
    1. மூசு 2. நுங்கு 3. வடு 4. கச்சல

15. சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல யானை.
    1. அகவும் 2. கனைக்கும் 3. பிளிறும் 4. ஊளையிடும்
16. சிங்கத்தின் இளையது குருளை என்பது போல குரங்கின் இளையது
    1. போதகம் 2. பறள் 3. பிள்ளை 4. குட்டி
17. ஆ நிரை என்பது போல யானைக்கு
    1. மந்தை 2. தொழுவம் 3. பந்தி 4. பண்ணை
18. வாழையின் இளம் பிஞ்சு கச்சல் என்பது போல பலாவின் இளம் பிஞ்சு
    1. மூசு 2. வடு 3. குரும்பை 4. நுங்கு
19. குரங்கு அலப்பும் என்பது போல தேவாங்கு
    1. கத்தும் 2. கதறும் 3. கரையும் 4. அழும்
20. தேர் செலுத்துபவன் பாகன் என்பது போல விமானம் செலுத்துபவன்
    1. சாரதி 2. வலவன் 3. மாலுமி 4. மீகாமன்
21. பின்வருவனவற்றுள் தனி வினை
    1. கண்டான் 2. கண்டுபிடித்தான் 3. முன்னேறினான் 4. கேள்விப்பட்டான்
22. பின்வருவனவற்றுள் கூட்டு வினையாக அமைவது.
    1. கற்றான் 2. கற்பித்தான் 3. காத்திருந்தான் 4. விழுந்தான்
23. ஒரு பெயர்ச்சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர்
    1. பெயரடைத்தொடர் 2. வினையடைத்தொடர்
    3. பெயர்த்தொடர் 4. வினைத்தொடர்
24. பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியமாக அமைவது
    1. சுதந்திர இந்தியாவே எனது நோக்கம் எனக் காந்தியடிகள் கூறினார்
    2. வாணி பூக்களைக் கொய்து சாமிக்கு வைத்தாள்
    3. கண்ணன் கோயிலுக்குச் சென்று வழிபட்டான்
    4. நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் சென்றோம்
25. சமநிலை வாக்கியத் தொடர்களால் அமைந்த வாக்கியம்
    1. தனி வாக்கியம் 2. கூட்டு வாக்கியம் 3. கலப்பு வாக்கியம் 4. சொற்றொடர்
26. பின்வருவனவற்றில் பெயரடைத் தொடராக அமைவது
    1. கன்னங்கரிய 2. மிக விரைவாக 3. பயங்கரமாக 4. பிளிறின
27. ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் கொண்ட வாக்கியம்
    1. கலப்பு வாக்கியம் 2. கூட்டு வாக்கியம் 3. தனிவாக்கியம் 4.வாக்கியத் தொடர்
28. கலப்பு வாக்கியம் என்பது
    1. ஒரு வாக்கியத் தொடரால் அமைந்தது
    2. சமநிலை வாக்கியத் தொடர்களால் அமைந்தது
    3. சமனில் வாக்கியத் தொடர்களால் அமைந்தது
    4. ஒன்றிற்கு மேற்பட்ட வாக்கியத் தொடர்களால் அமைந்தது
29. செய்திகளை ஊடகங்களுக்குப் பெற்றுத் தருபவர்
    1. செய்தியாளர் 2. தரகர் 3. பத்திராதிபர் 4. ஆசிரியர்
30. செய்தியை எழுதும் போது கவனிக்கப்படாதது
    1. தலைப்புச் செய்தியை எழுதுதல் 2. கவர்ச்சியான முறையில் எழுதுதல்
    3. தெளிவான மொழிநடையைக் கையாளுதல் 4. மேற்கூறிய எதுவுமில்லை.

## பகுதி II

➢ **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01) ஈதல் அறம் எவ்வகையில் அமைய வேண்டும்?
முகம் மலர்ந்து, இனிமையாகப் பார்த்து, விரும்பிய மனத்தோடு இனிய சொற்களைக் கூறுவதாக அமைய வேண்டும்.

02) பண்பட்ட இனிய சொற்களின் பயன்கள்

- பாவம் குறைந்து அறம் பெருகும்
- இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் இன்பம் தரும்
- பிறருக்கு நன்மையைக் கொடுத்து இன்பத்தையும் அறத்தையும் தரும்

03) ''சிறுமையுள் நீங்கிய இன்சொல்'' பற்றி விளக்குக.
பிறருக்குத் துன்பம் தராத சொல். அதாவது இன்சொல் தனக்கும் பிறருக்கும் இன்பத்தையே தரும். மாறாகத் துன்பம் தராது.

04) 'கனியிருப்பக் காய் கவர்தல்'' என்ற உவமைத் தொடரின் சிறப்பினை எழுதுக.
இனிய பழங்கள் இருக்கின்ற போது காயை எவரும் பறித்துண்ண மாட்டார்கள். அதுபோல இனிய சொற்கள் உள்ள போது கொடிய வன் சொற்களைக் கூறக்கூடாது. இன்சொல் பேசுதலின் அவசியம் இத்தொடர் மூலம் வலியுறுத்தப்பட்டிருப்பது சிறப்பாகும்.

05) இனிய சொற்களைக் கூறுதல், பணிவு என்பன எவ்வகைச் சிறப்புடையன?
ஒருவன் பணிவு உடையவனாகவும் இன்சொல் பேசுபவனாகவும் இருப்பின் அவனுக்கு அதைவிடப் பெருமை தருபவை வேறொன்றும் இல்லை. அதுவே சிறப்பு.

06) நகரம் எங்கும் வெளிச்ச மயமாவதற்குக் காரணம் யாது? அது அற்றுப் போகும் போது ஏற்படும் சூழல் எத்தகையது?
எண்ணற்ற மின் விளக்குகள் பேரொளி பரப்பிக் கொண்டிருந்தமை
ஒளி அற்றுப் போகும் போது எங்கும் இருள் சூழும்.

07) 'இரவை இரவாகவே காட்சிப்படுத்தும் ஒளி'' எத்தகைய பண்புச் சிறப்புடையது?
இயற்கையின் எழிலை உணரும்
இனிமைப் பண்பை உடையது

08) 'இருட்டு குறைவான வெளிச்சம்'' என்ற மகாகவியின் கூற்றினை விளக்குக.
இரவிலும் ஒளி செய்கின்ற அற்புதங்கள் நிறைந்திருக்கின்றன. வானத்தின் வெள்ளிகள், அமுத ஒளி பாய்ச்சும் குளுமையான நிலவு காணப்படும். எனவே இருட்டு குறைவான வெளிச்சம் என்கிறார்.

09) நாகரிகப் பெரு வெளிச்சம் எத்தகைய தீமைகளை ஏற்படுத்தியுள்ளது?
மனிதர்கள் நிலவின் அழகை, விண்மீன்களை வானத்தின் ரகசியங்களைக் காணத் தவறியமை.

10) வலிமை தரும் செயற்கையை வளர்க்கும் அதேவேளை, இயற்கை வனப்புக்களை அள்ளிப் பருகும் பக்குவத்தின் அவசியத்தை இவ்வாக்கம் எவ்வகையில் வலியுறுத்தி நிற்கின்றது என விளக்குக.
இயற்கையை இரசித்து மகிழ்ந்த பழங்கால மனிதர்களையும் செயற்கைச் சாதனங்களில் அமிழ்ந்து போய்விட்ட இக்கால மனிதர்களையும் எடுத்துக்காட்டி, இனிமையான இயற்கை வசதிகளைக் கண்டு வியந்து ரசித்துப் பழகிப் பயன்படுத்தி மகிழக்கூடிய மனதைப் பெறவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

## செய்தி வகைகள்

**அரச செய்திகள்**

**வைரஸ் தாக்கிய இருவருடன் இருந்த 65பேர் கண்டுபிடிப்பு**

கொழும்பு. மார்ச் 14

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு இலக்காகியுள்ள இருவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய 65 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

**வெளிநாட்டுச் செய்திகள்**

**ஆஸ்திரேலிய காட்டுத்தீ**

ஆஸ்திரேலியாவில் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பித்த காட்டுத்தீ இந்த வருடத்தின் ஆரம்பத்திலேயே உச்சம் பெறத் தொடங்கியது. சுமார் 70 இடங்களில் தீ பரவலாக எரிந்தது. சுமார் 15 மில்லியன் ஹெக்டேயர் நிலப்பரப்பு காட்டுத் தீயில் எரிந்து நாசமானது. பலகோடி டொலர் பொருளாதாரப் பின்னடைவை ஆஸ்திரேலியா சந்தித்தது. அதன் பின்னர் வெள்ளத்தாலும் கிழக்கு ஆஸ்திரேலியா இன்னல்களை எதிர்கொண்டது.

கொரோனா வைரஸ் காரணமாக பெரும் சுற்றுலாத் தலமான இத்தாலி வின்ஸ் நகரம் மூடப்பட்டுள்ளது. அங்கு தற்போது கொரோனாவை அழிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

**விளையாட்டுச் செய்திகள்**

**மேசைப் பந்தாட்டத்தில் இலங்கை வேந்தன் கல்லூரியில் 3ஆம் இடம்**

இலங்கை பாடசாலைகள் மேசைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட மேசைப் பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் உடுவில் மகளிர் கல்லூரி அணி கொழும்பு றோயல் கல்லூரி அணியை 3 : 0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

**அராலியில் மாட்டுவண்டிச் சவாரி**

அராலி. மார்ச் 14

அராலி ஸ்ரீமுருகன் நிலையத்தின் 80ஆம் ஆண்டு அமுத விழாவை முன்னிட்டு தமிழரின் பாரம்பரிய நிகழ்வாக நடாத்தப்படும் மாட்டுவண்டிச் சவாரி நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணிக்கு அராலி மேற்கு கொத்துத்துறை சவாரித்திடலில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக அராலி இராணுவப் பொறுப்பதிகாரி சி. ரத்னாயக்கா, சிறப்பு விருந்தினராக அராலி மேற்கு கிராம அலுவலர் ப. சிந்துஜன் ஆகியோர் கலந்து கொள்வர்.

**வர்த்தக வாணிபச் செய்திகள்**

**பான்சிக்கடை வாடகைக்கு**

நல்லூர் கோயிலுக்கு அருகில் பான்சிக்கடை வாடகைக்கு விடப்படும்.

**மாதிரி மேடைப் பேச்சு**

### செய்யுந் தொழிலே தெய்வம்

அன்புசால் அவைத் தலைவர் அவர்களே, அறிவுசால் பெரியோர்களே, தாய்மார்களே, அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் என் பணிவார்ந்த வணக்கம். உங்கள் முன்னிலையில் செய்யுந் தொழிலே தெய்வம் என்ற தலைப்பில் பேசக்கிடைத்த பெருவாய்ப்புக் குறித்து பெரிதும் மகிழ்கிறேன்.

'செய்யுந் தொழிலே தெய்வம். அந்தத் திறமைதான் நமது செல்வம்" என்பது பட்டுக்கோட்டை, கவிஞர் கல்யாணசுந்தரனாரின் பவள வரிகள். நாம் எந்தத் தொழில் செய்கிறோம் என்பது முக்கியமல்ல. எப்படிச் செய்கிறோம் என்பதுதான் முக்கியம். நாம் செய்கின்ற தொழிலில் உயர்வு, தாழ்வு என்கின்ற பேதமே இல்லை. இருக்கவும் முடியாது.

தொழில்கள் எல்லாம் சிறப்புக்குரியன. அவை நம் வாழ்விற்கு வழி செய்வன. எனவே செய்யுந் தொழிலே – உழைப்பே தெய்வம் என நாம் கருத வேண்டும்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில் உண்டு கழித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று பாடினார் பாரதியார். உழைக்காது சோம்பியிருப்போரை கண்டிக்கும் அவர் தொழில் செய்வோரை வாழ்த்தி வணங்கிடத் தவறவில்லை. இதன் மூலம் தொழிலின் மகிமையை அவர் உலகுக்கு உணர்த்தினார். தொழில் செய்வோரைப் பாரதியார் என்றும் போற்றத் தவறியதில்லை. தொழிலாளர்களே நாட்டின் முன்னேற்றத்திற்கு மூல வேர்களாக உள்ளனர் என்பது அவரது கருத்தாகும்.

'கைவருந்தி உழைப்பவர் தெய்வம்" என்று பாரதி வியந்து பாராட்டுகிறார். தொழிலாளர்களைப் பிரம்மனுக்கு நிகராகக் காட்டும் பாரதியார் தொழில் செய்வோரைப் போற்றிப் பாராட்டுவதன் மூலம் மென்மேலும் தொழில் செய்திட வருமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கிறார்.

'அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே!" – என்கிறார்.

அன்பர்களே, நன்கு சிந்தித்துப் பாருங்கள். இந்தப் பூமி யாருக்குச் சொந்தம்? பாடுபட்டுழைக்கும் பாட்டாளிகளுக்கே சொந்தம் என்கிறார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.

பாடுபடுபவர்களுக்கே இந்தப் பாரிடம் சொந்தமையா! காடு திருத்தி நல்ல – நாடு காண்பது அவரல்லவோ? பாரதியார் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று குறிப்பிட்டமையை இங்கு நாம் நினைவு கூரவேண்டும். காடு திருத்திக் கழனியாக்கி நாடு முன்னேற நல்லுழவுத் தொழில் செய்யும் உழவர்களே இந்தப் பூமியின் சொந்தக்காரர்களாக விளங்க வேண்டும் என்று விரும்புகிறார் கவிமணி.

இவற்றிற்கும் மேலாகப் பாவேந்தர் பாரதிதாசனார் கூறுவதைப் பாருங்கள்.'சித்திரச் சோலைகளே உமை நன்கு திருத்த இப்பாரினிலே அன்று எத்தனை தோழர் இரத்தம் சிந்தினரோ உங்கள் வேரினிலே" எனத் தொழிலாளர்கள் தம் உழைப்பை இமயத்தின் உச்சியில் ஏற்றிப் பாடுகின்றனர். எந்த வேலையையும் நாம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். உழைப்பால் உயர்ந்த கோடீஸ்வரர்களின் வாழ்க்கைச் சரிதங்களை வாசித்துப் பாருங்கள் அவர்கள் தங்கள் அந்தஸ்துக்குக் குறைச்சல் என்று எந்த வேலையையும் மதிப்பிடுவதில்லை. எந்த வேலையையும் செய்யத் தயாராக இருந்தார்கள் என்ற உண்மையை புரிந்து கொள்வீர்கள். செய்யும் தொழிலே தெய்வமாகக் கருதி உழைத்தவர்களே வாழ்வில் உயர்வு பெற்றனர்.

சீனா, ரஷ்யா போன்ற நாடுகளிலே வெள்ளிப் பணத்தைக் காட்டிலும் வியர்வைத் துளிகளுக்கே மதிப்பதிகம். ஜப்பான் நாட்டை ஒருகணம் நோக்குங்கள். தொழிற்றுறையில் இன்று உலகுக்கே வழிகாட்டும் நிலையில் திகழ்கிறது. அந்நாட்டு மக்களின் அயரா உழைப்பே அதன் முன்னேற்றத்திற்கு மூலகாரணம். 'ஒரு கவிதை எழுதுவதில் உள்ள பெருமை ஒரு நிலத்தை உழுவதில் இருக்கிறது, என்கிறார் ஜோர்ஜ் வாஷிங்டன். உழவுத் தொழில் மட்டுமன்றி அனைத்துத் தொழிலுமே வந்தனைக்குரியன.

"தாழாதே எவரையும் தாழ்த்தாதே" என்கிறார் எமிலி ஜோலா. அதையே நம் லட்சியமாகக் கொள்ள வேண்டும். எத்தொழில் செய்பவராயினும் அவர்களும் மனிதர்களே! என்ற எண்ணம் நமக்கு இருத்தல் வேண்டும். உழைப்பின் வாராத உறுதிகள் உளவோ? என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

'வியர்வையைச் சிந்து, நீ நன்கு வாழ்வாய்" என்கிறது ஆபிரிக்கப் பழமொழி. நம் உடலும் வளரும், தொழிலும் வளரும் உழைப்பாலே என்பதை உணர்தல் வேண்டும்.

'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்? ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில், ஒழுங்காகப் பாடுபடு வயற் காட்டில், உயரும் உன்மதிப்பு அயல்நாட்டில்' என்ற திரைப்படப் பாடலை நன்கு சிந்தித்துப் பாருங்கள். உழவுத் தொழில் மட்டுமல்ல ஒவ்வொரு தொழிலுமே உயர்ந்ததுதான்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்...." என்றார் வள்ளுவர். 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை" என்றார் நாமக்கல் கவிஞர். வெ. இராமலிங்கம்பிள்ளை எத்தொழிலையும் ஏற்றுச் செய்திடும் மனநிலை உருவாக வேண்டும். செய்யுந் தொழிலில் பற்றுக்கொள்ள வேண்டும். தொழிலே தெய்வம் எனப் போற்றி வாழ வேண்டும். இன்றைய சூழ்நிலையில் இது மிக மிக அவசியம் எனக் கூறி என் உரையை நிறைவு செய்கின்றேன்.

அனைவருக்கும் நன்றி வணக்கம்

**வினா**

“நட்பை வளர்க்கும் இன்சொல்லும் பகையைத் தூண்டும் வன்சொல்லும்” எனும் பொருளில் மேடைப் பேச்சினை எழுதி உரையாற்றுக. மேடைப் பேச்சினைத் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.

யா/இலங்கை வேந்தன் கல்லூரியில் முத்தமிழ் விழாவில் தலைமை தாங்கி நிகழ்த்தும் முத்தமிழ் மன்றத் தலைவர் அவர்களே, காப்பாளராக விளங்கும் எமது கல்லூரி அதிபர் அவர்களே, பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பிக்கும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களே, இங்கு குழுமியிருக்கும் ஆசான்களே, சக மாணவிகளே அனைவருக்கும் என் உளங்கனிந்த வணக்கம்.

அடியேன் உங்கள் முன்னிலையில் ‘நட்பை வளர்க்கும் இன்சொல்லும் பகையைத் தூண்டும் வன்சொல்லும்” எனும் தலைப்பில் உரையாற்ற வந்துள்ளேன்.

“இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் எவன் கொலோ
வன் சொல் வழங்குவது”

என்றான் பொய்யாமொழிப் புலவன் வள்ளுவன். இனிய சொல், பேசுவோனுக்கும் கேட்போனுக்கும் இனிமையைத் தருவதால் இனிய சொற்களைப் பேசுதலே எல்லோர்க்கும் இன்பத்தையும் நட்பையும் உண்டாக்கும். மாறாக துன்பம் தரும் வன்சொற்களைப் பேசினால் மற்றவர்களிடம் தீராத பகையையே மூட்டி விடும்.

இனிய சொல் என்றால் என்ன? அன்பு கலந்தனவும் வஞ்சனையற்ற மனத்திரனரான சான்றோர் வாயில் இருந்து வரும் சொற்களே இன்சொற்கள் ஆகும். “இன்சொல் எண்பதத்தை ஆகுமதி” என்றான் புறநாநூற்றுப் புலவன். புரவலன் எப்போதும் காட்சிக்கு எளியவனாகவும் இன்சொல் பேசுபவனாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த சங்கப் புலவன் அறிவுறுத்துவதாக இப்பாடல் வரி அமைந்துள்ளது.

இன்சொல் ஆற்றல் மிக்கது. வன்சொல்லால் சாதிக்க முடியாததை இன்சொல்லால் இலகுவில் சாதித்து விடலாம். இரும்புப் பாரையால் பிளக்க முடியாத கருங்கற் பாறையானது பசிய மரத்தின் வேருக்கு நெக்குவிடும் தன்மை கொண்டது. அது போல அன்பு கலந்த இன்சொல்லால் அகிலத்தையே ஆண்டிடலாம்.

கொடுப்பதற்கு எதுவும் இல்லையே என்று ஏங்கி நிற்கத் தேவையில்லை. அகமும் முகமும்மலர்ந்து இன்சொல் பேசுங்கள். அனைவரையும் நண்பராக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்குத் துன்பம் தராத இன்சொல் ஒருவனுக்கு இப்பிறப்பிலும் இன்பத்தையே தரும்.

யாரிடத்திலும் இன்பத்தைத் தருகின்ற இனிய சொல் பேசுபவனுக்கு, யாரும் வெறுத்து ஒதுக்கும் துன்பம் ஒருபோதும் வராது. அனைவரும் விரும்பி ஏற்கும் இன்பமே பெருகும்.

# அலகு 10

## செய்யும் தொழிலே தெய்வம்

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி – கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி (செய்யும்)

பயிரை வளர்த்தால் பலனாகும் - அது
உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்கும் துணையாகும் - இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்
தினம் வேலையுண்டு குல மானமுண்டு
வருங்காலமுண்டு அதை நம்பிடுவோம் (செய்யும்)

சாமிக்குத் தெரியும் பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலைமை – அந்தச்
சாமி மறந்தாலும் பூமி தந்திடும்
தகுந்த பலனை - இதைப்
பாடிப்பாடி விளையாடி ஆடிப் பல
கோடிகோடி முறை கும்பிடுவோம் (செய்யும்)

காயும் ஒருநாள் கனியாகும் - நம்
கனவும் ஒருநாள் நனவாகும்
காயும் கனியும் விலையாகும் - நம்
கனவும் நினைவும் நிலையாகும் - உடல்
வாடினாலும் பசி மீறினாலும் - வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம். (செய்யும்)

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
-ஆளுக்கொரு வீடு – 1960-

1. இப்பாடலைப் பாடிய கவிஞர் யார்?
   பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.
2. இப்பாடல் இடம் பெற்ற நூல் யாது?
   ஆளுக்கொரு வீடு.

3.இப்பாடலின் பிரதான கருத்து யாது?
செய்யும் தொழிலால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு கிடையாது எனவும் எத்தொழிலையும் விடாமுயற்சியுடன் செய்தால் வெற்றிபெற முடியும் எனவும் இப்பாடல் புலப்படுத்துகிறது.

4.இப்பாடலில் தெய்வமாக குறிப்பிடப்படுவது யாது?
நாம் செய்யும் தொழில்

5.செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு கிடையாது என்பதனை இப்பாடல் எவ்வாறு புலப்படுத்துகிறது?
செய்யும் தொழில் சிறிதோ? பெரிதோ? அதனைத் தெய்வமாக கருதி முயற்சியுடன் செய்தால் உயர்வு மட்டுமே கிடைக்கும். எனவே தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை என இப்பாடல் கூறுகின்றது.

6.செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை என்பதனை எடுத்தியம்பும் திருக்குறள் ஒன்றினைத் தருக?

…………………………………………………………………………………………

……………………………………………………………………………………..

7.கடின உழைப்பு வெற்றியையே தரும் என்பது இப்பாடலில் எவ்வாறு கூறப்படுகிறது?

“வேர்வைகள் எல்லாம் விதையாகும்” என்ற பாடலடிகளின் ஊடாகக் கடின உழைப்பினால் தகுந்த பலன் கிடைக்கும் எனவும் அது வெற்றியையே தரும் எனவும் கூறப்பட்டுள்ளது.

8.”வாடினாலும் பசி மீறினாலும் - வழி
மாறிடாமலேவாழ்ந்திடுவோம்” என்ற வரிகள் ஊடாகக் கவிஞர் கூறவிழைவது யாது?

வறுமை ஏற்பட்ட போதிலும் எமக்குரிய நெறிமுறைகளிலிருந்து வழுவாது வாழ வேண்டும் என்ற கருத்தினைக் கவிஞர் கூறுகிறார்.

9.இப்பாடலின் ஊடாக “முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்” என்ற கருத்து எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

செய்யும்தொழிலைத் தெய்வமாக கருதி முயற்சி செய்யும்போது தெய்வம் மறந்தாலும் பூமி மறக்காது பலனைத்தரும் என்பதனூடாக முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற கருத்து புலப்படுத்தப்படுகின்றது.

10.உடலினை வருத்தி முயற்சி செய்தால் அதற்குரிய பலன் கிடைக்கும் என்பதனை வெளிப்படுத்தும் திருக்குறள் ஒன்று தருக?

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்

## அடைமொழிகள்

1. அடைமொழி என்றால் என்ன?
   ஒரு சொல்லின் பொருளை மேலும் விளக்குவதற்காகவோ? அல்லது அதன் தன்மையை வர்ணித்துக் கூறுவதற்கோ? பயன்படும் சொல் அடைமொழி எனப்படும்.
2. அடைமொழிகளை எத்தனை வகைப்படுத்தலாம்? அவை எவை?
   இரண்டு வகையாக 1.பெயரடை
   2.வினையடை
3. பெயரடை என்றால் என்ன?
   பெயர்ச்சொற்களின் பொருளை விசேடிக்கப் பயன்படுத்தப்படும் அடை பெயரடை எனப்படும்.
4. பெயரடைக்கு உதாரணம் தந்து விளக்குக?
   பெரிய மரம்
   சிறிய புத்தகம்
   வெள்ளை முயல்
   மேலுள்ள உதாரணங்களில் மரம், புத்தகம், முயல் ஆகிய பெயர்ச்சொற்களின் தன்மையினை மேலும் விளக்குவதற்கு “பெரிய, சிறிய, வெள்ளை” முதலிய அடைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
5. வினையடை என்றால் என்ன?
   வினைச் சொற்களின் பொருளை விசேடிக்க பயன்படுத்தப்படும் அடை வினையடை எனப்படும்.
6. வினையடைக்கு உதாரணம் தந்து விளக்குக?
   இன்று செய்தேன்
   வேகமாக ஓடினேன்
   இனிமையாகப் பாடினான்
   மேலுள்ள உதாரணங்களில் செய்தேன், ஓடினேன், பாடினான் ஆகிய வினைச்சொற்களின் தன்மையினை மேலும் விளக்குவதற்கு “இன்று, வேகமாக, இனிமையாக” முதலிய அடைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
7. வேகமான என்பது எவ்வகை அடைமொழி என குறிப்பிட்டுக் காரணம் கூறி விளக்குக?
   பெயரடைமொழி ஆகும்.
   பெயர்ச்சொல்லின் தன்மையை காட்டுவதால் அது பெயரடை ஆகும்.
   உதாரணம் - வேகமான காற்று.

# சொற்பொழிவு

1. சொற்பொழிவு என்றால் என்ன?
   கேட்போர் மனதில் கருத்தோட்டத்தினை உண்டாக்கும் வகையில் சரளமாக உரையாற்றுதலை சொற்பொழிவு என்று அழைப்பர்.

2. நல்ல சொற்பொழிவு ஒன்றின் இயல்புகளாகக் கூறப்படுபவை யாவை?
   - தலைப்புக்கமைவாக இருத்தல்
   - தெளிவாக இருத்தல்
   - தேவையான இடங்களில் தொனி வேறுபாடுடையதாக இருத்தல்
   - விளக்கமாகவும் பொருள் விளங்கும் வகையிலும் கருத்தூன்றிப் பேசப்படல்
   - திரட்டப்பட்ட தகவல்களைக் கேட்போர் விரும்பும் வகையில் வழங்குவதாக இருத்தல் வேண்டும்.
   - பொருத்தமான மேற்கோள்கள், கதைகள், கிளைக்கதைகள், பாடல்கள் கையாளப்பட்டிருத்தல் வேண்டும்.

3. சொற்பொழிவின் பிரதானமான இரண்டு வகைகளும் எவை?
   - ஆன்மிகச் சொற்பொழிவு
   - இலக்கியச் சொற்பொழிவு

4. ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?
   - ஆலயங்களில் திருவிழா நிகழ்வுகளின்போது
   - ஆலயங்களில் விசேட நாட்களின்போது
   - பாடசாலைகளில் சமயம்சார் விழாக்களின்போது
   - அறநெறிப் பாடசாலைகளின் சமயம்சார் நிகழ்வுகளின்போது
   - அமைப்புசார் நிறுவனங்களின் சமயம்சார் விழாக்களின்போது
   - தொண்டு நிறுவனங்களின் சமயம்சார் விழாக்களின்போது

5. ஆன்மிகச் சொற்பொழிவுகளைக் கேட்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
   - இறைநம்பிக்கை வளர்ச்சியடையும்.
   - மன ஒருமைப்பாடு ஏற்படும்.
   - புராண, இதிகாச சம்பவங்களை அறிந்துகொள்ள முடியும்.
   - மூட நம்பிக்கைகளில் இருந்து விடுபட்டு இறை நம்பிக்கை ஏற்படும்.

6. இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?
   - ஆலயங்களில் திருவிழா நிகழ்வுகளின்போது
   - பாடசாலைகளில் இலக்கிய விழாக்களின்போது
   - கல்விசார் நிறுவனங்களின் இலக்கிய நிகழ்வுகளின்போது.
   - இலக்கியத் துறைசார்ந்த அமைப்புக்களின் நிகழ்வுகளின்போது.

7. இலக்கியச் சொற்பொழிவுகளைக் கேட்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
   - இலக்கியம்சார் அறிவு விருத்தியடையும்.
   - இலக்கியச் சம்பவங்களை அறிந்துகொள்ள முடியும்.
   - தமிழில் உள்ள புகழ்பெற்ற இலக்கியங்களையும் அவற்றின் தன்மைகளையும் அறிந்துகொள்ள முடியும்.

8. சொற்பொழிவுகளைக் கேட்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
   - அவதானித்துக் கேட்டுக் கிரகித்துச் சிந்திக்கும் திறன் விருத்தியடையும்.
   - அறிவாற்றல் விருத்தியடையும்.
   - குறிப்பெடுக்கும் திறன் வளர்ச்சியடையும்.
   - பேச்சாற்றல் வளர்ச்சியடையும்.
   - கேட்டுக்கிரகித்தவற்றைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தும் ஆற்றல் வளர்ச்சியடையும்.

9. சொற்பொழிவொன்றை கேட்டுக்கிரகித்து குறிப்பெடுக்கும் பொறிமுறைகளைத் தருக?
   - சொற்பொழிவு நிகழும் இடத்திற்கு எழுதுதாள்கள், எழுதுகருவிகள் என்பவற்றை எடுத்துச் செல்லல்.
   - கருத்தூன்றிக் கேட்டல்.
   - கருத்துக்களைக் குறிப்பெடுத்தல்.
   - சொற்பொழிவில் கையாளப்படும் மேற்கோள்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளல்.
   - எளிதில் பொருள் விளங்கமுடியாத சொற்களை, கலைச் சொற்களை குறித்து வைத்தல்.

## அலகு 11
## செய்யுளை மனனஞ்செய்யும் வழி

1. இப்பாடப்பகுதி இடம்பெறும் கட்டுரை இடம்பெற்ற நூல் யாது?
   இலக்கிய மஞ்சரி.
2. ஒரு பகுதியை மனப்பாடம் செய்வதன் அவசியம்பற்றி இக்கட்டுரையில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
   எமது வாழ்வின் சில சந்தர்ப்பங்களில் பயன்படக்கூடியதாக அமைவதாலும் முன்னைய காலத்தில் மனப்பாடம் செய்தவர்கள் பிற்காலத்தில் அறிஞர்களாகவும் வித்துவான்களாகவும் வந்தனர் என்பதாலும் மனனஞ்செய்வது அவசியமானதாகும்.
3. ஒரு பகுதியை இலகுவாக மனனஞ் செய்வதற்கு நாம் செய்யவேண்டியவை யாவை?
   தரப்பட்ட பகுதியில் காணப்படும் எதுகைமோனைச் சொற்களை இனங்கண்டு அவற்றினை அடிப்படையாகக்கொண்டு செய்யுளை மனனஞ்செய்தல் வேண்டும்.
4. எதுகை என்றால் என்ன?
   செய்யுளில் அடிகள்தோறும் வரும் இரண்டாவது எழுத்து ஒரே எழுத்தாக அமைவது எதுகை எனப்படும். அதாவது செய்யுளின் சீரடிகள் தோறும் இரண்டாவது எழுத்து ஒன்றித்து வருவது எதுகை என்று கூறப்படும்.
5. எதுகைச் சொற்களை எடுத்துக்காட்டி விளக்குக?
   “பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
   நாலும் கலந்துனக்கு நான் தருவேன்….: என்ற செய்யுளில் பாலும் , நாலும் என வரும் அடிகளில் இரண்டாவது எழுத்தாக “லு” என்னும் எழுத்து அமைந்துள்ளது. இவ்வாறு அடிகள் தோறும் இரண்டாவது எழுத்து ஒரே எழுத்தாக அமைவது எதுகை எனப்படும்.
6. மோனை எழுத்து என்றால் என்ன?
   செய்யுளின் சொற்கள் தோறும் அல்லது அடிகள்தோறும் வரும் முதலாவது எழுத்து ஒரே எழுத்தாக அமைவது மோனை எனப்படும்.
7. மோனை எழுத்துக்கு எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக?
   “அன்று அரற்றி அழுத அரிவையை……” என்ற அடிகளில் “அ” என்ற எழுத்து, சொற்கள் தோறும் முதலாவதாக அமைந்துள்ளது. இவ்வாறு ஒரே எழுத்து சொற்கள் தோறும் முதல் எழுத்தாக அமைவது மோனை எனப்படும்.
8. எதுகை. மோனைச் சொற்கள் தொடர்பான அறிவு மனனம் செய்வதற்கு எவ்வகையில் பயன்படுகின்றது?
   எதுகை மோனைச் சொற்களின் அமைப்பு வடிவமானது ஒத்த எழுத்துக்களைக் கொண்டமைவதால் ஒத்த ஓசை உடையதாக விளங்குகின்றன. இதனை அடிப்படையாகக்கொண்டு இலகுவாக மனனம் செய்துகொள்ள முடியும்.

# நிறுத்தக்குறிகள்.

1. **நிறுத்தக்குறிகள்** என்றால் என்ன?
ஒரு எழுத்தாக்கத்தை உருவாக்குவதற்கும் உருவாக்கிய ஆக்கங்களைக் கருத்துப் பிழையின்றித் தெளிவாகப் பொருள் விளங்கிக் கொளவதற்கும் பயன்படுத்தப்படுகின்ற குறியீடுகளே நிறுத்தக்குறிகள் எனப்படும்.

2. **நிறுத்தக்குறிகளின்** வகைகளையும் வடிவங்களையும் தருக?
    - முற்றுப்புள்ளி / முடிப்பிசைக்குறி – (.)
    - வினாக்குறி / வினாவிசைக்குறி – (?)
    - வியப்புக்குறி / மெய்ப்பாட்டுக்குறி – (!)
    - காற்புள்ளி / உறுப்பிசைக்குறி – (,)
    - அரைப்புள்ளி / தொடரிசைக்குறி – ( ;)
    - முக்காற்புள்ளி / விளக்கிசைக்குறி – (: )
    - சிறுகோடு / விட்டிசைக்குறி – (-)
    - அடைப்புக்குறி – ( )
    - மேற்கோட்குறி / அனுவாதக்குறி – ("…")
    - தனிநிலைத்தொடர்க்குறி – (……)

3. **முற்றுப்புள்ளி** என்றால் என்ன? பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?
ஒரு வாக்கியம் நிறைவடைந்ததை குறித்துக்காட்ட பயன்படுத்தப்படும் குறியீடு முற்றுப்புள்ளி எனப்படும்.
    - சாதாரண செப்பு வாக்கியம் ஒன்று முற்றுப்பெற்றுள்ளதென்பதைக் காட்ட வாய்க்கியத்தின் இறுதியில் இக்குறியீடு இடப்படுகின்றது.

உதாரணம் - மாணவர்கள் பலதுறைசார்ந்த அறிவுடையவர்களாக திகழ்கின்றனர்.
    - வியங்கோள் வாக்கியங்களின் இறுதியில்

உதாரணம் - வாழிய பல்லாண்டு.
    - ஏவல் வாக்கியத்தின் இறுதியில்

உதாரணம் - தம்பி இங்கே வா.
    - ஒரு விடயத்தை சுருக்கமாக கூறும்போது

உதாரணம் - ஐக்கிய நாடுகள் சபை – ஐ.நா.சபை.
இலங்கை மின்சார சபை - இ.மி.சபை
கிறிஸ்துவுக்கு முன் - கி.மு.
    - கடிதத்தின் முகவரியின் இறுதியிலும், திகதியின் இறுதியிலும்

உதாரணம் - 20, கோவில் வீதி,
நல்லூர்.
19.10.2019.

4. **வினாவிசைக்குறி** பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் தருக?
    - நேர்கூற்று வாக்கியங்களின் இறுதியில் பயன்படுத்தப்படும்.

உதாரணம் - நீ ஒரு புத்தகமாவது தரமாட்டாயா?
    - அயற்கூற்று வினா வாக்கியத்தின் இறுதியில் பயன்படுத்தப்படுவதில்லை.

உதாரணம் - நான் அதைச்செய்தேனா, என்று அவன் கேட்டான்.
    - ஐயத்துக்கிடமான யாதேனும் ஒரு கூற்றின் பின் அடைப்புக்குறிக்குள் வினாக்குறி இடப்படும்.

உதாரணம் - திருக்குறள் தோற்றம்பெற்ற காலம் கி.பி 100 (?)

5. **மெய்ப்பாட்டுக்குறி** பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?
    - பல்வேறுபட்ட மன உணர்வுகளை வெளிக்காட்ட இக்குறி பயன்படுத்தப்படுகின்றது. அதாவது இன்பம்,துன்பம்,கோபம்,பயம்,வெறுப்பு முதலான உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களின் பின்னர் இக்குறி பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணம் - ஆகா! சிவனின் திருவுருவத்தின் அழகுதான் என்னே!
பாவம்! வாயில்லாப்பிராணி.
ஐயோ! கொரோனாவால் உயிர்கள் இறக்கின்றனவே!

6. **காற்புள்ளி** பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்கள் யாவை?

- வாக்கியத்தில் தொடர்ந்து வருகின்ற சொற்களையும் துணை வாக்கியங்களையும் பொருள் விளங்கும் வண்ணம் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படும்.

உதாரணம் - உயர்ந்த நட்புக்குக் குசேலனும் கண்ணனும், குகனும் இராமனும், கர்ணனும் துரியோதனனும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாவர்.

- வாக்கியத்தில் எழுவாய் நெடுந்தொடராய் இருப்பினும் பயனிலைக்குத் தொலைவில் இருப்பினும் இந்த எழுவாய்க்குப்பின் காற்புள்ளி இடப்படும்.

உதாரணம் - காகம், கண்டதைத் தின்னும் ஒரு பறவையான போதும், தனது உடம்பைத் தூய்மையாக வைத்துக்கொள்ளும்.

- ஒருவரை அல்லது ஒன்றை விளித்துக்கூறுமிடத்து விளிப்பெயரை அடுத்து காற்புள்ளி இடப்படும்.

உதாரணம் - கண்ணா, ஓடி வா

7. **முக்காற்புள்ளி** பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

- பிரதான கூற்றுக்குப் பின்னே வரும் கூற்று அதன் விளக்கமாக அமையுமிடத்து முக்காற்புள்ளி இடப்படும்.

உதாரணம் - நூலகம் கவனிப்பாரின்றி கிடக்கின்றது: நூல்கள் செல்லரித்து நாசமாகிவிட்டன.

- ஒரு பட்டியலை அறிவிப்பதற்கு முன்வரும், அவையாவன, உதாரணமாக, வருமாறு என்பன போன்ற தொடர்களுக்குப்பின் முக்காற்புள்ளி இடப்படும்.

உதாரணம் - இந்த பழக்கூடையில் காணப்படுபவை: மாம்பழம், பலாப்பழம், திராட்சைப்பழம், கொய்யாப்பழம், தோடம்பழம் என்பனவாகும்.

8. **அரைப்புள்ளி** பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

- ஒரு எழுவாய் பல பயனிலைகள் கொண்டமையும்போது ஒவ்வொரு பயனிலையின் பின்னும் இக்குறி பயன்படுத்தப்படும்.

உதாரணம் - குமார் கடைக்குச் சென்றான்; உணவு வாங்கினான்; வீட்டிற்கு வந்தான்; உணவை உண்டு மகிழ்ந்தான்.

9. **சிறுகோடு** பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

- உயிர்த்துடிப்பும் நாடக நயமும் தோன்ற எழுதும்போது காற்புள்ளி அல்லது அரைப்புள்ளி வரவேண்டிய இடத்தில் இக்குறி பயன்படுத்தப்படும்.

உதாரணம் - அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்-
ஆங்கோர் காட்டிலே பொந்திடை வைத்தேன்.

- வேறு வேறாகக் கூறப்பட்ட பொருள்களை தொகுத்துக் கூறுவதற்கு பயன்படுத்தப்படும்.

உதாரணம் - தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் - எல்லோரும் விழாவில் கலந்துகொண்டனர்.

- சொற்கள் சுருக்கப்படும்போது பயன்படுத்தப்படும்.

உதாரணம் - எ-டு (எடுத்துக்காட்டு)

- உணர்ச்சிக் குழப்பத்தைக் காட்டுதற்கு
  எனக்கு வந்த கோபத்தில் - என்ன செய்வதென்று தெரியாது அவனை அடித்துவிட்டேன்.
- தயங்கித் தயங்கிப் பேசுவதை காட்டல்
  என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் - உங்களால் எனக்கொரு கருமம் ஆகவேண்டியுள்ளது.

10. **அடைப்புக்குறி** பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

- சான்றாதாரம், வரைவிலக்கணம், விளக்கம், மொழிபெயர்ப்பு போன்றவற்றைக் காட்டுவதற்கு இக்குறி பயன்படுத்தப்படுகின்றது.
  அ. செங்கயல் பழனம் எங்கும் திருமகள் உறையும் எங்கும் (சேக்கிழார் பெரியபுராணம் திருநாட்டுச் சிறப்பு)
  ஆ. கட்டுரை (ஒரு பொருள்பற்றி சிந்தித்து, கருத்துக்களை விரித்து எழுதுதல்)
  இ. மின்பிறப்பாக்கி (Transformer)

11. **மேற்கோட்குறி** அல்லது அனுவாதக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?
- ஒருவருடைய கூற்றை அப்படியே மேற்கொண்டு எடுத்தாளும்போது மேற்கோட்குறி பயன்படும்.
  "பெண்டிர் தமையுடையீர் பெண்பாவமன்றோ? பெரிய வசை கொள்வீரோ?"
- புத்தகம், சஞ்சிகை, கட்டுரை முதலியவற்றை பெயர்சுட்டிக் குறிப்பிடப் பயன்படும்.
  கம்பர் எழுதிய "கம்பராமாயணம்" என்ற இதிகாச காவியம் கற்பவர் மனதை கவர வல்லது.

## இரட்டைக்கிளவி

1. இரட்டைக்கிளவி என்றால் என்ன?
   ஒருசொல் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் அமைந்து பிரித்துப் பார்க்கும்போது பொருள் இன்றி அமைவது இரட்டைக்கிளவி எனப்படும்.
2. இரட்டைக்கிளவிக்கு உதாரணம் தருக?
   கலகல, மடமட, கமகம, கடுகடு, கலீர்கலீர்
3. இரட்டைக்கிளவியை பயன்படுத்தி வாக்கியம் அமைத்துக் காட்டுக?
   குடுகுடு – ஔவைப்பாட்டி **குடுகுடு** என நடந்தார்.
   கலகல – தெனாலிராமன் கதையைக் கேட்ட சபையோர் **கலகல** என சிரித்தனர்.
   கலீர்கலீர் - காலில் கட்டிய சலங்கை **கலீர்கலீர்** என ஒலித்தது.
   கமகம – பலாப்பழத்தின் வாசனை **கமகம** என மூக்கைத் துளைத்தது.
   குளுகுளு – தென்றல் காற்று **குளுகுளு** என சாளரத்தின் வழியே வேகமாக வந்தது.
   சடசட – காற்றில் ஜன்னல்கள் **சடசட** என அடித்தன.
   தகதக – கமலாவின் கையிலிருந்த வளையல்கள் **தகதக** என மின்னின
   மடமட – விளையாடிக் களைத்த தம்பி **மடமட** எனத் தண்ணீர் குடித்தான்
   திருதிரு – கையும் மெய்யுமாக அகப்பட்ட திருடன் **திருதிரு** என விழித்தான்.

## அலகு 12
## எறும்புக் குடும்பம்

1. எறும்புக் குடும்பம் என்னும் கட்டுரையை எழுதியவர் யார்?
   எஸ் கிருஸ்ணன் ரஞ்சனா
2. இக்கட்டுரை இடம்பெற்ற நூல் யாது?
   இப்போது அவை இங்கு வருவது இல்லை
3. எறும்புகளது விடாமுயற்சிக்கான உதாரணமாக இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ள விடயங்கள் யாவை?
   அ. பெரும் புயல் மழையின் பின்பும் இவ் எறும்புகள் மிகத்துடிப்புடன் புதிய புற்றுக்கள் அமைப்பதில் ஈடுபட்டன.
   ஆ. பிறர் உதவியை எதிர்பாராது உடனடியாகத் தாமே செயற்பட்டமை.
4. உலகின் மிகப்பழங்காலத்துக்குரிய பூச்சி இனங்களாக குறிப்பிடப்படுபவை யாவை?
   கரப்பான் பூச்சி, எறும்பு
5. எறும்புக் கூட்டம் ஒன்றில் காணப்படும் 3பிரிவுகளும் எவை?
   அ. ஆண்
   ஆ. ராணி
   இ. பெண் உழைப்பாளிகள்
6. எறும்புப் புற்றுக்கள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன?
   சகதிமண், களிமண், கொண்டும் சில வகை எறும்புகள் சிறு குச்சிகள் களிமண் உருண்டை என்பவற்றைக்கொண்டும் அமைக்கப்படுகிறது.
7. இக்கட்டுரையில் எறும்புகளின் உடல் அமைப்பு எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
   எறும்புகளின் உடல் 3பகுதிகளைக் கொண்டது. தலை, உடற்பகுதி, பின்பகுதி என மூன்று பகுதிகளைக் கொண்டது

தலை - இப்பகுதியில் வாய், கண், உணர்வுக் குழல்கள் உண்டு. கண்கள் பல விழித்திரையைக் கொண்டது. வாய்ப்பகுதி கூரிய ரம்பம் போன்றது. உணர்வுக் குழலால் சுவை, மணம், சத்தம் போன்றவை உணரப்படும்.

உடல்பகுதி – ஆறு கால்களும் நடுப்பகுதியையும் கொண்டதாகும்.

பின்பகுதி – வயிறும் மலப்புழையும் இங்கு காணப்படுகின்றன. சில எறும்புகளுக்கு இங்குதான் விசநீர் சுரப்பியும் கொடுக்கும் உண்டு.

## வாக்கிய உறுப்புக்கள்

1. வாக்கியம் ஒன்றின் பிரதான உறுப்புக்கள் யாவை?
எழுவாய்
பயனிலை
செயப்படுபொருள்
அடைமொழிகள்
2. வாக்கியம் என்றால் என்ன?
சொற்கள் தனித்து நின்று அல்லது தொடர்ந்து வந்து கருத்தைத் தந்து முற்றுப்பெற்று நிற்குமாயின் அது வாக்கியம் எனப்படும்.
3. செயப்படுபொருளை அடிப்படையாகக்கொண்டு வாக்கியங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
    - செயப்படுபொருள் குன்றிய வாக்கியம்
    - செயப்படுபொருள் குன்றாத வாக்கியம்
4. செயப்படுபொருள் குன்றிய வாக்கியம் என்றால் என்ன?
செயப்படுபொருள் வெளிப்படையாகவோ மறைந்தோ இடம்பெறாத வாக்கியம் செயப்படுபொருள் குன்றிய வாக்கியம் எனப்படும்.
5. செயப்படுபொருள் குன்றிய வாக்கியத்துக்கு உதாரணம் தருக?
    - குமார் சிரித்தான்
    - தம்பி இருந்தான்
    - குழந்தை அழுதது.
6. செயப்படுபொருள் குன்றிய வாக்கியத்தை எவ்வாறு இனங்காண முடியும்?
வாக்கியத்தின் பயனிலைச் சொல்லுடன் எதை என்ற வினாவினைக் கேட்கும்போது விடை கிடைக்காத வாக்கியம் செயப்படுபொருள் குன்றிய வாக்கியம் எனப்படும்.
''தம்பி சிரித்தான்'' இதில் எதைச் சிரித்தான் என்ற வினாவினை எழுப்பும்போது விடை கிடைக்கப்பெறவில்லை. எனவே இவ்வாக்கியம் செயப்படுபொருள் குன்றிய வாக்கியம் எனப்படும்.
7. செயப்படுபொருள் குன்றாத வாக்கியம் என்றால் என்ன?
செயப்படுபொருள் வெளிப்படையாகவோ மறைந்தோ இடம்பெற்றிருக்கும் வக்கியம் செயப்படுபொருள் குன்றாத வாக்கியம் எனப்படும்.
8. செயப்படுபொருள் குன்றாத வாக்கியத்துக்கு உதாரணம் தருக?
    - தம்பி பாடம் படித்தான்
    - குழந்தை உணவு உண்டது
    - தம்பி எழுதினான்
9. செயப்படுபொருள் மறைந்துள்ள வாக்கியத்துக்கு உதாரணம் தருக?
    - தம்பி எழுதினான்
    - தங்கை பாடினாள்
    இவ்வாக்கியங்களில் எதை என்ற வினாவினை எழுப்பும்போது அதற்கான விடை மறைந்து காணப்படுகின்றது.
10. செயப்படுபொருள் குன்றாத வாக்கியத்தை எவ்வாறு இனங்காணமுடியும்?
வாக்கியத்தின் பயனிலைச்சொல்லுடன் எதை என்ற வினாவினைக் கேட்கும்போது விடை கிடைக்கப்பெறும் வாக்கியம் செயப்படுபொருள் குன்றாத வாக்கியம் எனப்படும்.
''இராமன் வில்லை உடைத்தான்'' இதில் எதை உடைத்தான் என்ற வினாவுக்கு விடையாக வில் என்பது கிடைக்கப்பெறுகிறது. இவ்வாறு விடை கிடைக்கப்பெறும் வாக்கியம் செயப்படுபொருள் குன்றாத வாக்கியமாகும்.

"திருவள்ளுவர் இயற்றினார்'' இதில் எதை இயற்றினார் என்ற வினாவுக்கு வாக்கியத்தில் விடை இல்லாவிட்டாலும் திருக்குறள் என்னும் விடை வாக்கியத்தில் மறைந்துள்ளது. இவ்வாறு மறைந்து காணப்பட்டாலும் செயப்படுபொருள் குன்றாத வாக்கியம் எனப்படும்.

## கலைச்சொற்கள்

1. கலைச்சொற்கள் என்றால் என்ன?
   கலைச்சொற்கள் என்பது ஏதாவது அறிவுத்துறையில் பயன்படுத்தக்கூடிய சிறப்பு சொற்றொகுதியை குறிப்பதாகும். அதாவது சொற்சிக்கனத்தோடு பொருளில் ஆழத்தையும் துல்லியத் தன்மையையம் கொண்ட சொற்கள் கலைச்சொற்கள் எனப்படும்.
2. கலைச்சொற்கள் எதற்கு பயன்படுத்தப்படுகின்றது?
   துறைசார்ந்த வல்லுனர்களால் தங்களுக்குரிய துறைசார்ந்த விடயங்களை சுருக்கமாகவும் துல்லியமாகவும் பரிமாறிக்கொள்ள பயன்படுத்தப்படுகின்றது.
3. கலைச்சொற்களின் பண்புகள் யாவை?
   - துறைசார்ந்த வல்லுனர்களால் மட்டும் பயன்படுத்தப்படுகின்றது.
   - தன்னகத்தே சிறப்புப்பொருளைக் கொண்டிருக்கும்.
   - சொல்லும் பொருளும் துறைசார்ந்த வல்லுனர்களாலேயே தீர்மானிக்கப்படும்.
   - பிற துறை சார்ந்தவர்களாலும் சாதாரண மக்களாலும் விளங்கிக்கொள்வது கடினம்.
   - பொது வழக்கில் இவை பயன்படுத்தப்படுவதில்லை.
4. பின்வரும் கலைச்சொற்களின் பொருளை எழுதுக.
   - What app – புலனம்
   - You tube– வலையொளி
   - Messenger – வற்றியம்
   - GPS – தடங்காட்டி
   - CCTV – மறைகாணி
   - Skype – காயலை
   - Species - இனங்கள்
   - Sting – மொடுக்கு
   - Throax – நெஞ்சறை
   - Antenna– உணர்கொம்பு
   - Budject - வரவுசெலவுத் திட்டம் / பாதீடு
   - Value – பெறுமதி
   - Demand – கேள்வி
   - Interview – நேர்காணல்
   - Weather – வானிலை
   - Climate – காலநிலை
   - Census– தொகைமதிப்பு
   - Acadamic year -கல்வியாண்டு
   - Seminar – கருத்தரங்கு
   - Monitoring – கண்காணித்தல்
   - Evaluation – மதிப்பீடு

## அலகு 13
## "தந்தை மகளுக்கு எழுதிய புகழ்பெற்ற கடிதம்''

1. இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கடிதம் யாரால் எழுதப்பட்டது?
   எ.்.ப்.ஸ்காட்.்.பிட்ஸ் ஜெரால்டு
2. இக்கடிதம் யாருக்கு எழுதப்பட்டது?
   மகள் ஸ்காட்டுக்கு
3. கடிதத்தில் மகள் குறித்த எந்த விடயத்துக்காக தந்தையின் மகிழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது?
   மகள் தன் கடமைகளை ஒழுங்காகச் செய்வதைப்பற்றி எண்ணித் தந்தை மகிழ்ச்சியடைந்தார்.
4. மகளின் எச்செயற்பாடு குறித்த மேலதிக விளக்கம் இக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது?
   மகள் மகிழ்ச்சியாக இருப்பதுபற்றிக் கூறப்பட்டிருந்தது. அதற்காகத் தந்தை, தான் எப்போதும் மகிழ்ச்சியை நம்பியதில்லை. அதே சமயம் துன்பத்தையும் நம்பியதில்லை ஏனென்றால் அது எப்போதும் உன் வாழ்க்கையில் உண்மையாக நடைபெறாது என்பதாகும்.

5. மகிழ்ச்சி, துன்பம் என்பன ஏன் நம்பிக்கைக்குரியனவல்ல என இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?
மகிழ்ச்சி, துன்பம் என்பன எமது வாழ்வில் எப்போதும் நிரந்தரமல்ல என்பதால் நம்பிக்கைக்குரியனவல்ல இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. வெகுமதி, தண்டனை தொடர்பாக தந்தை கருதுவதாக இக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது யாது?
வாழ்க்கையில் நற்பண்புகளால் கிடைக்கும் வெகுமதிகளை விட கடமையை தவறாகச்செய்வதால் கிடைக்கும் இரண்டு மடங்கான தண்டனையையே தான் நம்புவதாகத் தந்தை இக்கடிதத்தில் கூறியுள்ளார்.

7. ‘‘அழுகிய மலர்கள், களைச் செடிகளைவிட மோசமான நாற்றமெடுக்கும்’’ என்னும் கூற்று எதனை வலியுறுத்த முற்படுகின்றது?
நல்ல பண்புகள் மாற்றமடையும்போது மிக மோசமான பழக்கம் உருவாகி சுற்றியுள்ளவர்களைப் பாதிக்கும் என கூறப்பட்டுள்ளது.

8. இன்ப துன்பங்களை வாழ்வில் உண்மையாக எப்போதும் நிலையாகப் பெறமுடியாது எனினும் அவற்றை எவற்றில் பார்க்கமுடியும் என இக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது?
மேடைகளிலும், திரைகளிலும், புத்தகங்களிலுமே பார்க்க முடியும்.

## இணைப்பிடைச் சொற்கள

**1.** இணைப்பிடைச்சொற்கள் என்றால் என்ன?
இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வாக்கியங்களை இணைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற சொற்கள் இணைப்பிடைச்சொற்கள் எனப்படும்.

2. இணைப்பிடைச்சொற்கள் சிலவற்றைக் குறிப்பிடுக?
ஆனால், ஆகவே, எனவே, எனினும், அல்லது

3. ‘‘ஆனால்’’ என்னும் இணைப்பிடைச்சொல்லைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைத்துக்காட்டுக?
   - இராதா கறுப்பு நிறங்கொண்டவள்
   - இராதா அழகானவள்
   இராதா கறுப்பு நிறங்கொண்டவள் **ஆனால்** அழகானவள்.

4. ‘‘அல்லது’’ என்னும் இணைப்பிடைச்சொல்லைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைத்துக்காட்டுக?
   - நான் பாடுவேன்
   - நான் ஆடுவேன்
   நான் பாடுவேன் **அல்லது** ஆடுவேன்

5. ‘‘ஆகவே’’ என்னும் இணைப்பிடைச்சொல்லைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைத்துக்காட்டுக?
   - வானம் கறுப்பாக காணப்படுகிறது
   - இன்று மழை பெய்யும்
   வானம் கறுப்பாக காணப்படுகிறது. **ஆகவே** இன்று மழை பெய்யும்.

## கடிதம்

1. கடிதம் என்றால் என்ன?
எமது தேவை, நிலைமை, எண்ணம், விருப்பு, வெறுப்பு முதலான பல்வேறு விடயங்களையும் பிறரோடு பரிமாறிக்கொள்ள பயன்படும் ஊடகமே கடிதம் எனப்படும்.

2. கடிதத்தின் மறுபெயர்கள் சில தருக?
ஓலை, கடதாசி, திருமுகம், மடல், முடங்கல்

3. கடிதத்தின் பிரதானமான வகைகளை குறிப்பிடுக?
   - உறவு முறைக் கடிதம்
   - தொழில் முறைக் கடிதம

4. உறவுமுறைக்கடிதம் எழுதப்படும் நோக்கம் யாது?
    - அன்பைத் தெரிவித்தல்
    - வாழ்த்தைத் தெரிவித்தல்
    - சுக துக்கம் விசாரித்தல்
    - தேவைகளைத் தெரிவித்தல்
    - அனுதாபம் தெரிவித்தல்
5. உறவுமுறைக் கடிதத்தின் உறுப்புக்கள் யாவை?
   முகவரி, விளிப்பு, உடல், முடிப்பு
6. தொழில் முறைக்கடிதம் என்றால் என்ன?
   சேவை அல்லது தேவை ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக சேவை அல்லது தேவை பெற்றுக்கொள்ளும் ஒருவர் சேவை அல்லது தேவை வழங்குபவருக்கு எழுதப்படும் கடிதம் தொழில்முறைக்கடிதம் எனப்படும்.
7. தொழில்முறைக் கடிதத்தின் வகைகள் யாவை?
    - தகவல் வேண்டல் கடிதம்
    - தகவல் தெரிவித்தல் கடிதம்
    - அழைப்பாணை
    - பிடியாணை
    - சுற்றுநிருபம்
8. தொழில்முறைக் கடிதம் ஒன்றின் உறுப்புக்கள் யாவை?
    - முகவரி
    - உள்முகவரி
    - விளிப்பு
    - தலைப்பு
    - உடல்
    - நன்றி
    - முடிப்பு
    - ஒப்பம்
9. தொழில்முறைக் கடிதம் ஒன்றின் மாதிரி அமைப்பு

...........
...........
........
.................
..................
.........................
...........................................................................................................
............................................................................................................
...................................................................
......................
.................
.................

10. வறியோர் நலத்திட்டங்கள் ஏற்படுத்துதல் தொடர்பாக சமூகநல உத்தியோகத்தர் என்ற வகையில் சமூக சேவை அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்று எழுதுக?

சே.சிவகுமாரன்,
சமூகநல உத்தியோகத்தர்,
நல்லூர்.
24.11.2019.

செயலாளர்,
சமூக சேவைகள் அமைச்சு,
வட மாகாணம்.

ஐயா,

வறியோர் நலத்திட்டங்களை ஏற்படுத்துதல்

நல்லூர் பிரதேசமானது வறிய மக்கள் அதிகம் வாழும் பிரதேசமாகும். அன்றாடம் பிறரிடம் சென்று கூலித் தொழில் செய்து வாழும் மக்கள் மாதத்தில் அரைவாசி நாளுக்குமேல் கூலித்தொழில்கூட இல்லாத நிலையிலும் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கபபெறதா நிலையிலும் வறுமையிலேயே தமது வாழ்வுடன் போராடுகின்றனர்.

இப்பிரதேசத்தில் கிராமியத் தொழிலைப் புரிவதற்கு வேண்டிய மூலப்பொருட்கள் நிறைந்திருப்பதோடு மக்களும் இத்தொழிலில் தேர்ச்சியுடையவர்களாவர்.

மட்பாண்டங்கள் வனைதல், கூடை முடைதல், பனம் பொருள் உற்பத்தி, கைவினைப்பொருள் உற்பத்தி போன்றவற்றை மேற்கொள்வதற்கு வறியோர் நலத்திட்டங்களை இக்கிராமத்தில் பெற்றுத்தருவதோடு அவர்களது உற்பத்திக்குச் சந்தை வாய்ப்பினையும் பெற்றுக்கொடுத்து இருண்ட வாழ்வில் ஒரு விடியலை ஏற்றிவைக்கும் வண்ணம் தங்களை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி.

இவ்வண்ணம்
சே.சிவகுமாரன்.

## அலகு 14
## வான் குருவியின் கூடு

1. இக்கட்டுரையை எழுதியவர் யார்?
   பெருமாள் முருகன்

2. இக்கட்டுரையின் பிரதான நோக்கம் யாது?
   ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையில் திறமை உண்டு. அவற்றை இனங்கண்டு செயற்பட்டால் வெற்றிபெற முடியும் என்பதை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

3. கட்டுரையாசிரியருக்கு தாழ்வுணர்ச்சி ஏற்பட்டதற்கான காரணங்களாக இக்கட்டுரையில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் யாவை?
   கிராமத்திலிருந்து கல்வி கற்று பின் கல்வி சார்ந்த பின்னணி எதுவும் இன்றி கல்லூரிப் படிப்புக்கு செல்லும் முதல் தலைமுறை மாணவனாக இருந்தபோது தாழ்வுணர்வு ஏற்பட்டதாக கூறுகிறார்.

4. நம் சமூகத்தில் காணப்படும் பொதுவான புத்தியாக இக்கட்டுரையில் கூறப்பட்ட விடயம் யாது?
   ஒருவருக்கு எது எளிதாகக் கைவருமோ ஒருவர் எதில் திறமைபெற்றவரோ அதனை தெரிவு செய்துகொள்வதற்கு இங்கே அனுமதி வழங்கப்படுவதில்லை. பெற்றோர் தம் கனவுகளைப் பிள்ளைகள் மூலம் நிறைவுசெய்ய முற்படுகின்றனர்.

5. இப்பொதுப் புத்தியை ஔவையார் எவ்வாறு முறியடிக்கிறார்?
   மற்றவர்களோடு ஒப்பிட்டு, தாழ்வுணர்ச்சிகொண்டு தவிக்கும் மனதிற்கு, உனக்கு எளிதாக கைவரக்கூடிய ஒன்று உண்டு. அதை இனங்கண்டு செயற்படு. வெற்றி கிடைக்கும். எனத் துணிவு ஏற்படுத்திப் பொதுப்புத்தியை முறியடிக்கிறார்.

6. இப்பொதுப் புத்தியை முறியடிக்க ஔவையார் கையாண்ட பாடலடி யாது?
   ‘‘எல்லோர்க்கும் ஒவ்வொன்(று) எளிது.’’

7. ஒருவரது ஆர்வம் திறமைக்கேற்ப அவர்களை அத்துறையை தெரிவுசெய்ய வழிப்படுத்துவதற்கான அவசியம் யாது?
ஒவ்வொருவருக்குமென தனித்திறமைகள் உண்டு. அதனை இனங்கண்டு அத்துறையில் சென்றால் வெற்றி கிடைப்பது திண்ணம். அவ்வாறன்றி ஆர்வமற்ற திறமையற்ற துறையில் எவ்வளவு முயன்றாலும் வெற்றி கிடைப்பதென்பது சந்தேகமே. எனவே திறமை, ஆர்வம் சார்ந்து வழிப்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

8. ''எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது'' என்பதை தெளிவுபடுத்துவதற்கு ஔவையார் கையாண்ட உத்தி யாது?
தூக்கணாங்குருவி தனது கூட்டினை அழகான பின்னல் வேலைகளுடன் நுட்பமாக அமைத்துள்ளது. அரக்கினை சிறு பூச்சி உருவாக்குகின்றது. சின்னஞ்சிறு கறையான் அழகான புற்றினை கட்டியமைக்கின்றது. தேனீ தேன் கூட்டினை அமைக்கின்றது. சிலந்தி அழகான வலை பின்னுகின்றது. இவற்றைப்போல பிறரால் செய்யமுடியாது. எனவே நாம் பிறரோடு எம்மை ஒப்பிடாது எம்மால் செய்யக்கூடியதென ஒரு திறமை ஒளிந்திருக்கும். அதனைக் கண்டறிந்து முயற்சி செய்தால் வெற்றியடைய முடியும் என சிறு உயிர்களை உதாரணம்காட்டித் தெளிவுபடுத்துகிறார்.

9. தேர்வு முடிவுகளை எதிர்கொண்ட மாணவர்களுக்கு ஔவையின் இப்பாடல் எவ்வகையில் பயன்படுகிறது?
ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு பாடப்பகுதிகளில் வேறுபாடான புள்ளிகளைப்பெற்று மற்றைய மாணவனோடு ஒப்பிட்டு குழப்பமடைந்திருக்கும் போது இப்பாடல் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையில் திறமை உண்டெனக்கூறி அவர்களை வழிப்படுத்துகிறது.

10. பின்வரும் சொற்களின் அரும்பதங்களை எழுதுக?
- திறன் - திறமை
- அரக்கு – செம்மெழுகு
- ஏளனம் - இகழ்ச்சி
- கைவருதல் - தேர்ச்சிபெறல்
- நுட்பம் - திறமை
- ஆர்வம் - விருப்பம்
- உத்தி – முறைமை
- மதிப்பெண் - பரீட்சைப்பெறுபேறு
- தேர்வு – பரீட்சை

**அடுக்குத்தொடர்**

1. அடுக்குத்தொடர் என்றால் என்ன?
ஒரு சொல் அடுத்தடுத்து இரண்டுமுறை வந்து பிரித்துப்பார்க்கும்போது பொருள் தருமாயின் அது அடுக்குத்தொடர் எனப்படும்.

2. அடுக்குத்தொடர்ச் சொற்களுக்கு உதாரணம் தருக?
- சிறிய சிறிய
- பெரிய பெரிய
- கரிய கரிய
- வண்ண வண்ண
- மேலே மேலே
- உயர உயர
- விடியவிடிய
- பார்த்துப் பார்த்து
- பாம்பு பாம்பு
- நன்று நன்று
- வாழ்க வாழ்க
- அற்புதம் அற்புதம்

3. பின்வரும் அடுக்குத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்துக் காட்டுக?
- சிறிய சிறிய – மாணவர்கள் சிறிய சிறிய கதைகளை எழுதினார்கள்.
- பெரிய பெரிய – குமார் பெரிய பெரிய வீடுகளைக் கட்டினான்.
- சுடச்சுட – எனது அம்மா சுடச்சுடப் பலகாரம் செய்து தந்தார்.
- பக்கம் பக்கமாக – தம்பி ஒரு பேராசிரியரைப் பற்றி பக்கம்பக்கமாகக் கட்டுரை எழுதினான்.
- புதிதுபுதிதாக – தற்காலத்தில் புதிதுபுதிதாக நோய்த்தொற்று ஏற்படுகிறது.
- கூட்டம்கூட்டமாக – வானில் பறவைகள் கூட்டம்கூட்டமாக பறந்தன.

- குவியல்குவியலாக – வீடுகளில் குவியல்குவியலாக கற்கள் போடப்பட்டிருந்தன.
- குலைகுலையாக – தோட்டத்தில் திராட்சைப்பழங்கள் குலைகுலையாகத் தொங்கின.
- வாழ்கவாழ்க – குடிமக்கள் அரசனை வாழ்க வாழ்கவென வாழ்த்தினார்கள்.
- விடியவிடிய – சிவராத்திரியன்று ஆலயங்களில் விடியவிடியப் பூசைகள் நடைபெற்றன.
- குமுறிக்குமுறி – தாயைக்காணாத குழந்தை குமுறிக்குமுறி அழுதது.

**விளம்பரம்**

1. விளம்பரம் என்றால் என்ன?
   ஒரு பொருள் தொடர்பாகவோ அல்லது ஒரு விடயம் தொடர்பாகவோ பலர் அறியும்படி செய்யும் அனைத்துச் செயற்பாடுகளும் விளம்பரம் எனப்படும்.
2. விளம்பரத்தின் வகைகள் யாவை?
   - உற்பத்திப் பொருள் விளம்பரம்
   - நிறுவனங்களின் விளம்பரம்
   - மக்களுக்குச் செய்திகளை அறிவிக்கும் விளம்பரம்
   - பொதுத்தகவல்களைத் தெரிவிக்கும் விளம்பரம்
   - சொத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்துகை விளம்பரம்
   - அரச விளம்பரம்
   - விழாக்கால விளம்பரம்
3. விளம்பரம் செய்வதற்கான காரணங்கள் யாவை?
   - தகவல்களைத் தெரிவித்தல்
   - பொருட்களை அறிமுகப்படுத்தல்
   - உற்பத்திப் பொருட்களின் நுகர்வை அதிகரித்தல்
   - நுகர்வோரைக் கவருதல்
   - பொருட்களின் விற்பனையைப் பெருக்குதல்
4. விளம்பரத்தின் பண்புகள் யாவை?
   - சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருத்தல்
   - கச்சிதமான தகவல்களை கொண்டிருத்தல்
   - கவர்ச்சியான சொற்றொடரைக் கொண்டிருத்தல்
   - முகவர்களை கவரும் வகையில் புகைப்படங்களை கொண்டிருத்தல்
   - நுகர்வோர் மனதில் நம்பிக்கையை வளர்க்கும் வகையில் அமைந்திருத்தல்
5. விளம்பரம் ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை?
   - விளம்பரத் தலைப்பு
   - விளம்பரப்படுத்தும் பொருட்கள் தொடர்பான விபரம்
   - பொருள் தொடர்பான கவர்ச்சியான படங்கள்
   - நுகர்வுப் பொருளின் தன்மை
   - நுகர்வுப் பொருளின் விலை
   - பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்
   - விளம்பரம் செய்பவர் தொடர்பான விபரம்